




# தினப்புயல்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of. N.A :- RBN/4/3/06







மலர்-02 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் - 17

## காணாமல் போனோருக்கு மரணச்சான்றிதழ் - ஐ.நா செயலாளரிடம் ஜனாதிபதி கோட்டபாய தெரிவிப்பு



ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபை கூட்டத்தில் பங்கேற்பதற்காக நியூயோர்க் சென்றுள்ள ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டேரஸை சந்தித்து நேற்றைய தினம் கலந்துரையாடியுள்ளார். அதன்போது. காணாமல் போனோர் தொடர்பில் அரசாங்கம் என்ற ரீதியில் எடுக்கக்கூடிய நடவடிக் கைகளை உடனடியாக மேற்கொள்வதாகவும் மரணச் சான்றிதழ்களை வழங்கும் நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதாகவும். கொவிட்-19 பரவலுக்கு மத்தியில் நாட்டில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக் கைகள் குறித்து ஐ.நா செயலாளருடன் ஜனாதிபதி கலந்துரையாடியுள்ளார்.

அத்துடன். பயங்கரவாத செயற்பாடுகள் தொடர்பில் சந்தேகத்தின் அடிப்படை யில் கைதான பலர். தாம் ஆட்சிக்கு வந்தமையின் பின்னர் விடுவிக்கப் பட்டுள்ளனர் என்றும். விடுவிக்க முடியாத ஏனையோர் தொடர்பில் சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இலங்கையின் உள்ளக பிரச்சினைகளை நாட்டின் உள்ளக பொறிமுறையின் ஊடாக தீர்த்துக் கொள்ள முடியும் எனவும் அதற்காக புலம்பெயர்ந்த தமிழர்களுடன்... 03)




## கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அபார வெற்றி

ஐ.பி.எல். கிரிக்கெட்டில் 31வது லீக் ஆட்டம் நேற்று அபுதாபியில் நடை பெற்றது. இதில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ்–ரோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணிகள் பலப்பரீட்சை நடத்தின. டொஸ் வென்று பெட்டிங் தெரிவு செய்த ஆர்.சி.பி. அணி 92 ரன்களுக்குப் படுமோசமாக சுருண்டது.

பின்னர் 93 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் களம் இறங்கியது. பெட்டிங்கில் சொதப்பிய ஆர்.சி.பி. பந்து வீச்சிலா வது சிறப்பாக செயற்படும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் தொடக்க வீரர்களான கில், வெங்கடேஷ் அய்யர் ஆகியோர் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினர். (03)

## இன்றும் நாட்டில் மழை பெய்யும் சாத்தியம் – வளிமண்டலவியல் திணைக்களத்தின் முன்னறிவித்தல்

சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

வடமேல் மாகாணத்தில் பல தடவைகள் மழை பெய்யும் என எதிர் பார்க்கப்படுகின்றது. வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்க ளில் பல இடங்களில் பி.ப. 2 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின் றது. (03)



## தொடரும் சிறைக் கைதிகளின் போராட்டம்



இலங்கையின் சிறைகளில் இருக்கும் கைதிகள் அடிக்கடி தமது கோரிக்கைகளை முன்வைத்து போராட்டங்களை நடத்துவது வழமை. இந்நிலையில் திடீரென வெலிக்கடை சிறைச்சாலையின் கைதிகள் சிலர் கூரை மீது ஏறி ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்டுள்ளனர். நீண்டகாலமாக சிறைத் தண்டனை அனுபவித்து வரும் 10 கைதிகள் இந்த ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. முறையற்ற விதத்தில் அரசின் பொது மன்னிப்பு வழங்கும் நடவடிக்கை செயற்படுத்தப்படுவதாக கடந்த காலங்களில் சிறைகளில் போராட்டங்களில் ஈடுபட்ட கைதிகள் தெரிவித்துமிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல : 154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## அதிபர் ஆசிரியர்களின் தொடர் போராட்டங்களும், இழுபறியில் மாணவர்களின் கல்வி நிலையும்

கொவிட் வைரசின் தாக்கத்தினால் நாட்டில் பாடசாலை மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. எனினும் இணையவழிக் கற்கைகளை ஆசிரியர்கள் ஆரம்பித்திருந்தபோதிலும் இன்று அவ் நடவடிக்கைகளில் இருந்து விலகியுள்ளனர். சம்பள முரண்பாட்டை நீக்கக்கோரி அதிபர் மற்றும் ஆசிரியர் சங்கங்களினால் தொடர்ச்சியாக போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதுவரையில் அரசும் மாணவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு இப்போராட்டங்களுக்குரிய தீர்வு குறித்து அதிபர் ஆசிரியர் சங்கங்களுடன் தீர்க்கமாகப் பேசி முடிவுகளை எடுக்க முடியாமல் அவர்களுக்கு 5.000 ரூபா கொடுப்பனவு தொடர்பான சுற்றுநிருபம் கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தனவினால் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி கடமையில் ஈடுபட்டுள்ள அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் தமது கொடுப்பனவை வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக பெற்றுக்கொள்ள முடியும் என்றும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆசிரியர் மற்றும் அதிபர்களின் சம்பள முரண்பாடு தொடர்பில் எதிர்வரும் வரவு செலவுத்திட்டத்தில் தீர்வு பெற்றுக் கொடுக்கப்படவுள்ள நிலையில் செப்டம்பர் மற்றும் ஒக்டோபர் மாதங்களுக்கான கொடுப்பனவாக மாதாந்தம் 5000 ரூபா வழங்குவதற்கு அமைச்சரவை தீர்மானித்திருந்தது. அது தொடர்பான சுற்றுநிறுபமே வெளியிடப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேவேளை. அமைச்சரவை உப குழுவினால் பரிந்துரைக்கப்பட்டுள்ள ஆசிரியர் சேவை. அதிபர்கள் சேவை மற்றும் ஆசிரிய ஆலோசகர் சேவை ஆகியவற்றை இணைந்த சேவையாக பெயரிடப்படும் வர்த்தமானி எதிர்வரும் நவம்பர் 20ம் திகதி வெளியிடப்பட உள்ளதாகவும் ஏனைய பரிந்துரைகளை எதிர்வரும் ஆறு மாத காலங்களுக்குள் நடைமுறைப்படுத்துவதற்கு அதன் முன்னேற்றம் தொடர்பில் அமைச்சரவைக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார். அரசு-அதிபர் மற்றும் ஆசிரியர் சங்கங்களுக்கிடையிலான இழுபறி தொடரும் நிலையில். பாடசாலை மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் கேள்விக்குறியாகியுள்ளது.

## இன்று கூடுகிறது நாடாளுமன்றம்



கட்டளைகள் மற்றும் விதிமுறைகள் பலவற்றை முன்வைப்பதற்காக நாடாளுமன்ற அமர்வு இன்று முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இந்தவார நாடாளுமன்ற கூட்டத்தொடரினை இரண்டு நாட்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்துவதற்கு அண்மையில் இடம்பெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இதற்கமைய, இன்றும் நாளையும் நாடாளுமன்ற அமர்வுகள் இடம்பெறவுள்ளன.

அதனடிப்படையில், பல திருத்தச் சட்டங்கள் இன்று (21) நாடாளுமன்றில் முன்வைக்கப்படவுள்ளது.

அதேநேரம், நுகர்வோர் அதிகார சபை திருத்தச் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் நாளைய தினம் நாடாளுமன்றில் இடம்பெறும் என சபாநாயகர் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நாட்டில் மேலும் 93 கொவிட் மரணங்கள் நேற்று (20.09.2021) பதிவாகியுள்ளன. இதற்கமைய நாட்டில் பதிவாகியுள்ள கொவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 12,218 ஆக அதிகரித்துள்ளது. அத்துடன் நேற்று 1518 பேருக்கு கொவிட் தொற்று உறுதியாகியுள்ளது. இதற்கமைய இதுவரை அடையாளம் காணப்பட்ட கொவிட் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 506,009 ஆக அதிகரித்துள்ளது.**

## பாகிஸ்தான் கிரிக்கெட் தொடரை இங்கிலாந்து ரத்து செய்தது



கொரோனா வைரஸ் தொற்று உச்சத்தில் இருந்த போதிலும் பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இங்கிலாந்து சென்று கிரிக்கெட் போட்டிகளில் விளையாடியது. அதற்கு நன்றிக்கடனாக பாகிஸ்தான் சென்று கிரிக்கெட்டில் விளையாட இங்கிலாந்து கிரிக்கெட் நிறுவனம் சம்மதம் தெரிவித்தது.

அதன்படி அடுத்த மாதம் பாகிஸ்தான் சென்று இரண்டு டி20 போட்டிகளில் விளையாட இங்கிலாந்து கிரிக்கெட் நிறுவனம் சம்மதம் தெரிவித்திருந்தது. இந்த நிலையில் டி20 போட்டியில் விளையாடுவதில் இருந்து விலகியுள்ளது.

முன்னதாக, நியூசிலாந்து முதல் ஒருநாள் போட்டி நடைபெறுவதற்கு சற்றுமுன் தொடரில் இருந்து விலகியது. இந்த நிலையில் இங்கிலாந்தும் விலகியுள்ளது.

## 2021 பட்டத்தை வென்ற இலங்கை பெண்



கிம்ஹானி பெரேரா என்ற இலங்கைப் பெண் “Miss Teen International Botswana 2021 “ கிரீடத்தை வென்றுள்ளார். இந்த போட்டி கடந்த (19) நடைபெற்றுள்ளது. அவர் போட்டியில் போட்ஸ்வானாவின் பிலிக்வே மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தினார்.

அதன்படி, நான் இந்தியாவில் இடம்பெறவுள்ள Miss Teen International போட்டிக்கு தகுதி பெற்றுள்ளதாக கிம்ஹானி தனது ஃபேஸ்புக் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். “அந்த கிரீடத்தை வெல்வதே எனது நோக்கம்” என்றும் அவர் கூறியுள்ளார்.

## சிவில் சமூக இயங்குதளத்தின்...

[நேற்றைய இதழின் தொடர்ச்சி...]

மேலும், காணாமல் போனோரின் அலுவலக இணையத்தளத்தில் முப்படையினரின் பட்டியல் தொடர்ந்து காட்சிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் சாதாரண பொது மக்களின் முறைப்பாட்டுப் பட்டியல் அகற்றப்பட்டுள்ளது. இது காணாமல் போனோர் அலுவலகம் காணாமல் போனோர் பற்றிய உண்மைகளைக் கண்டறிவதில் கொண்டுள்ள கடப்பாடு தொடர்பில் காணாமல் போனோரின் குடும்பங்கள் மத்தியில் பாரிய கரிசனை மற்றும் சந்தேகம் உருவாகுவதற்கு காரணமாக அமைந்துள்ளது.

கடந்த 2019 ஒக்டோபரில் அமைச்சரவை காணாமல் போனோரின் குடும்பங்களுக்கு இடைக்கால மாதாந்தக் கொடுப்பனவாக ரூபாய் 6,000 வழங்கப்படுவதற்கு அனுமதியளித்திருந்தது. இக்கொடுப்பனவு வழங்கப்படாமல் இருப்பது காணாமல் போனோரின் குடும்பங்களின் தேவைகள் மற்றும் கரிசனைகளை தீர்ப்பதற்கு அரசாங்கம் தவறியுள்ளமையை எடுத்துக் காட்டுகின்றது. இக்கொடுப்பனவுகளுக்கு பொறுப்பானதாக அமைந்துள்ள நீதியமைச்சுக்கு காணாமல் போனோரின் குடும்பங்கள் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இக்கொடுப்பனவுகள் இன்னும் வழங்கப்படாமை தொடர்பில் காணாமல் போனோரின் குடும்பங்களால் தொடர்ச்சியாக தொடர்புடைய அமைச்சு மற்றும் பிரதமருக்கு நினைவூட்டல்கள் வழங்கப்பட்ட போதும் அவற்றுக்கு எந்த வித பதிலும் கிடைக்கவில்லை.

கடற்படையினரால் 11 பேர் காணாமல் ஆக்கப்பட்டனர் எனக் குற்றம் சாட்டப்பட்டு தொடரப்படும் வழக்கு போன்ற, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் தற்பொழுது முன்னெடுக்கப்பட்டு வரும் வழக்குகளில் நீதித்துறைச் செயற்பாடுகளில் எந்தவித முன்னேற்றமும் காணப்படவில்லை. மாறாக, குற்றம் சுமத்தப்பட்டோரை காப்பாற்றுதல் உள்ளடங்கலாக முன்னேற்றங்களை தடுக்கும் நோக்கிலேயே அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது. காணாமல் போனோர் அலுவலகம் ஏற்பாடு செய்த இணையவழிக் கருத்தரங்கில் நீதியமைச்சர் வெளியிட்ட கருத்துக்கள் போன்ற அரசாங்கத்தின் கூற்றுக்கள் வகை கூறவேண்டியவர்களுக்கு எதிராக நீதித்துறையினால் நடவடிக்கைகள் எடுப்பதை விடுத்து நட்ட ஈடுகள் ஊடாக "பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டு வரல்" என்ற நிலைப்பாட்டிலேயே அரசாங்கம் உள்ளதைக் காண்பிக்கின்றது.

காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி மற்றும் உண்மை தொடர்பில் ஆதரித்து வாதிடும் வடக்கு கிழக்கில் வாழும் காணாமல் போனோரின் குடும்ப உறுப்பினர்கள் கண்காணிப்புக்கு உட்படுத்தப்படுவதுடன் அவர்களின் நடவடிக்கைகள் தொடர்பாக விசாரணை செய்வதற்காக மிரட்டும் வகையில் பாதுகாப்பு முகவர் அமைப்புகளின் உறுப்பினர்கள் அக்குடும்பங்களுக்கு விஜயங்களை மேற்கொள்கின்றனர். அத்துடன் அவர்களின் ஆதரித்து வாதிடும் செயற்பாட்டை தடுக்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

6. தனிமைப்படுத்தல் சட்டங்களின் எதேச்சதிகாரமான பயன்பாடு

தொற்றுநோய் நிலைமையினைக் கட்டுப்படுத்துவதற்காக சுகாதார ஒழுங்கு விதிகளின் அவசியத்தை நாம் மதிக்கின்றோம். இருந்தபோதும் மிகவும் புராதனமான தனிமைப்படுத்தல் சட்டங்கள் பாரிய அளவில் அமைந்த இந்த சுகாதார அவசரநிலையை கையாள்வதற்கு போதியதாக அமையவில்லை. இவ்வாறான சூழ்நிலையில், இந்த பொதுமக்கள் சுகாதார நெருக்கடி நிலையை கையாள்வதற்கு அவசியமான புதிய சட்டவாக்கங்களை உருவாக்க அல்லது தொற்று நோய் நிலைமினை கையாள்வதற்கு பாராளுமன்றத்தை வினைத்திறனுடன் ஈடுபடுத்துவதற்கான முயற்சிகள் எவையும் எடுக்கப்படா நிலையினை எம்மால் அவதானிக்க முடிகின்றது.

அதற்கு மாறாக, அரசாங்கம் ஒன்றுகூடல் மற்றும் வெளிப்படுத்தல் சுதந்திரங்களை மட்டுப்படுத்த இந்த சட்டத்தை எதேச்சதிகாரமான வகையில் பயன்படுத்துவற்கான நியாயப்படுத்தலாக இந்த தொற்றுநோய் நிலைமினை பயன்படுத்துகின்றது. உதாரணமாக, சுகாதார ஒழுங்கு விதிகளைப் பின்பற்றி தொழிற்சங்கத் தலைவர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்வதற்கு அவர்களுக்குள்ள சட்ட ரீதியான உரிமைகளைப் பயன்படுத்தும் வேளை அவர்கள் பேருந்துகளைப் பயன்படுத்தி இலங்கை இராணுவத்தினால் நடத்தப்படும் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றனர். இந்த தனிமைப்படுத்தல் நிலையங்கள் அவர்களின் வீடுகளில் இருந்து நூற்றுக்கணக்கான மைல்கள் தொலைவில் அமைந்துள்ளன. இதன் விளைவாக சில நபர்கள் தனிமைப்படுத்தல் நிலையங்களில் தொற்றுக்குள்ளாவதுடன் அவர்களின் சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு என்பவற்றுக்கு குந்தகம் விளைகின்றது. அரசாங்கத்தை எதிர்த்தல் மற்றும் விமர்சித்தல் என்பவற்றுக்கு எதிராக பயத்தினை ஏற்படுத்துவதே அரசாங்கம் மேற்கொள்ளும் இச்செயற்பாடுகளின் நோக்கமாக அமைகின்றது.

7. சிறுபான்மைச் சமூகங்கள் இடையே நம்பிக்கையைக் கட்டியெழுப்பத் தவறியமை

இன முரண்பாட்டுக்கான ஒரு அரசியல் தீர்வு.

[நாளைய இதழில் தொடரும்...]

## காணாமல் போனோருக்கு...

கலந்துரையாடுவதற்காக அழைப்பு விடுப்பதாகவும் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இதன்போது கருத்து வெளியிட்ட ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் நாயகம், ஐக்கிய நாடுகள் சபை இலங்கைக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கும் என தெரிவித்துள்ளார்.

அங்கு தெரிவிக்கப்பட்ட ஜனாதிபதியினுடைய கருத்துக்கள் தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவை. காணாமல் போனவர்களுக்கு மரணச்சான்றிதழ் என்பது, ஒருவேளை அவர்கள் யுத்தத்தின் போது இறந்திருந்தால் ஒரு நபருக்கு மரணச்சான்றிதழை வழங்கலாம். ஆனால் ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் அரச தரப்பிடம் சரணடைந்த இளைஞர்கள் மற்றும் யுவதிகள் என்ன ஆனார்கள் என்கிற விடயம் தொடர்பில் முன்னாள் ஆட்சியாளர் மஹிந்த ராஜபக்ச அவர்கள் எதுவும் கூறாமல் மௌனமாகியுள்ளார். அப்போது இலங்கையின் பாதுகாப்புச் செயலாளராக இருந்த கோட்டபாய ராஜபக்சவும் இச்சம்பவங்களுக்குப் பொறுப்புக்கூறவேண்டியவர்.

குற்றம் செய்த தரப்பினர் எவ்வாறு நீதி வழங்க முடியும். அவர்கள் சர்வதேச நீதிமன்றினால் விசாரணைக்கு உட்படுத்தப்படவேண்டியவர்கள். பெற்றோரே தங்களது பிள்ளைகளை உங்களை நம்பி கொண்டுவந்து ஒப்படைத்தவர்கள். இன்று அவர்கள் இல்லை. என்ன ஆனது என பதில் கூறாமல் எவ்வாறு நீங்கள் மரணச் சான்றிதழை வழங்குவது. காலங்காலமாக அரச தரப்பினரின் கண்கட்டுவித்தைகளை நன்கு கற்றுக்கொண்டவர்கள் தமிழர்கள். இன்று சர்வதேச சமூகங்களையும் ஏமாற்றி வரும் அரச தரப்பினரின் உள்நாட்டு விசாரணைகளை எவ்வாறு ஏற்றுக்கொள்ள முடியும். யுத்தம் நிறைவடைந்து பத்து வருடங்களைக் கடந்துள்ளபோதிலும், வடகிழக்குப் பகுதிகளை அபகரிப்பதையே நோக்கமாகக்கொண்டுள்ள அரச தரப்பினர், தமிழ் மக்களுக்கு எவ்வாறு தீர்வினைத் தர முடியும்.

## கொல்கத்தா நைட்...

இந்த ஜோடி முதல் விக்கெட்டுக்கு 9.1 ஓவரில் 82 ரன்கள் குவித்தது. கில் 34 பந்தில் 48 ரன்கள் விளாசினார். வெங்கடேஷ் அய்யர் 27 பந்தில் 41 ரன்கள் அடித்து ஆட்டமிழக்காமல் இருக்க கொல்கத்தா நைட் ரைடர்ஸ் 10 ஓவரில் 1 விக்கெட் இழப்பிற்கு 94 ரன்கள் எடுத்து 9 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

## இன்றும் நாட்டில் மழை...

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொது மக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

கொழும்பிலிருந்து காலி ஊடாக ஹம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புகளிலும் புத்தளத்திலிருந்து காங்கேசன்துறை ஊடாக திருகோணமலை வரையான கடற்பரப்புகளிலும் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும். காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 20-30 கிலோ மீற்றர் வரை காணப்படும்.

மாத்தறையிலிருந்து ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளிலும் புத்தளத்திலிருந்து மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையான கடற்பரப்புகளிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-45 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மாத்தறையிலிருந்து ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகள் அவ்வப்போது ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும். நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகள் மிதமான அலையுடன் காணப்படும்.

அனுராதபுரம் - பி.ப. 2 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும். மட்டக்களப்பு - பி.ப. 2 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் சாத்தியம். கொழும்பு - அடிக்கடி மழை பெய்யும். காலி - அடிக்கடி மழை பெய்யும்.

யாழ்ப்பாணம் - பி.ப. 2 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் சாத்தியம். கண்டி - பி.ப. 2 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் சாத்தியம். நுவரெலியா - பி.ப. 2 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் சாத்தியம்.

இரத்தினபுரி - அடிக்கடி மழை பெய்யும். திருகோணமலை - பி.ப. 2 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும். மன்னார் - பி.ப. 2.00 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் சாத்தியம்.

(வளிமண்டலவியல் திணைக்களம்)

## இங்கிலாந்து முன்னாள் கால்பந்து வீரர் ஜிம்மி கிரீவ்ஸ் மரணம் அடைந்தார்




இங்கிலாந்து கால்பந்து அணியின் முன்னாள் வீரர் ஜிம்மி கிரீவ்ஸ் உடல்நலக் குறைவால் மரணம் அடைந்துள்ளார். அவருக்கு வயது 81. இங்கிலாந்து அணிக்காக 57 ஆட்டங்களில் விளையாடி 44 கோல்கள் அடித்துள்ள ஜிம்மி கிரீவ்ஸ் 1966-ம் ஆண்டு உலக கோப்பையை வென்ற இங்கிலாந்து அணியில் அங்கம் வகித்துள்ளார். அங்குள்ள டோட்டன்ஹாம் ஹாட்ஸ்புர் கிளப்புக்காக நீண்ட காலம் ஆடிய கிரீவ்ஸ் அந்த கிளப்புக்காக அதிக கோல்கள் (379 ஆட்டங்களில் 266 கோல்கள்) அடித்த பெருமைக்குரியவர் ஆவார்.

(அப்துல் ஜெப்பார் அப்துல்லா)

## அமெரிக்காவுக்கு வடகொரியா எச்சரிக்கை



அவுஸ்திரேலியாவுக்கு அணுசக்தி நீர் மூழ்கி கப்பல் வழங்கும் அமெரிக்காவின் முடிவை வடகொரியா கடுமையாக எதிர்த்துள்ளது. இந்தோ பசிபிக் பிராந்தியத்தில் சீனாவை எதிர் கொள்ள ஆக்கஸ் என்ற புதிய பாதுகாப்பு கூட்டமைப்பை அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் அவுஸ்திரேலியா உருவாக்கியுள்ளது. இத்திட்டத்தின் படி அவுஸ்திரேலியாவின் படை பலத்தை அதிகரிப்போம் என்றும் அந்நாட்டுக்கு அணுசக்தி நீர்மூழ்கி கப்பல் கிடைக்க உதவுவோம் எனவும் பிரிட்டனும், அமெரிக்காவும் அறிவித்துள்ளன.

இந்த நிலையில், அவுஸ்திரேலியாவுக்கு அணுசக்தி நீர் மூழ்கி கப்பல் வழங்கும் அமெரிக்காவின் முடிவை வடகொரியா கடுமையாக எதிர்த்துள்ளது. அவுஸ்திரேலியா, அமெரிக்கா, பிரிட்டன் இடையேயான ஏற்பாடு மிகவும் ஆபத்தானது எனவும் ஆசிய பசுபிக் பகுதியில் பாதுகாப்பு நிலையை கடுமையாக பாதிக்கும் என்றும் வடகொரியாவின் வெளியுறவுத்துறை அமைச்சக அதிகாரி தெரிவித்துள்ளார். இந்த ஒப்பந்தத்தை வடகொரியா உன்னிப்பாக கண்காணித்து வருவதாகவும், இந்த ஒப்பந்தம் தங்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் இருக்குமேயானால் தக்க பதிலடி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் எச்சரித்துள்ளது.

## ஹைத்தி அகதிகளை திருப்பி அனுப்பும் அமெரிக்கா



அமெரிக்காவை ஒட்டி மெக்சிகோ உள்ளது. அமெரிக்காவில் உள்ள டெக்சாஸ் மாநில டெல் ரியோ அருகே. இரு நாட்டு எல்லை அமைந்துள்ளது. அங்குள்ள ஆற்றின் ஒரு பகுதி அமெரிக்காவாகவும், ஒரு பகுதி மெக்சிகோவாகவும் உள்ளது. அந்த ஆற்றின் வழியாக வெளிநாட்டு அகதிகள் அமெரிக்காவுக்குள் நுழைந்து விடுவர். இதைத்தடுக்க எல்லையில் தடுப்பு வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் மெக்சிகோ எல்லை வழியாக அமெரிக்காவுக்குள் நுழைவதற்காக ஹைத்தி மற்றும் பெரு நாடுகளைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான அகதிகள் டெல் ரியோ பாலத்திற்கு அருகே வந்தனர். இவர்களில் பெரும்பாலானோர் ஹைத்தி நாட்டைச் சேர்ந்தவர்கள். அவர்களை அமெரிக்காவுக்குள் நுழையவிடாமல் தடுக்க, எல்லையில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அகதிகள் கூடியதால். அந்த பகுதியில் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டு உள்ளது. அகதிகள் கூட்டத்தில் ஏராளமான கர்ப்பிணி பெண்களும் இருக்கிறார்கள். இவர்களில் 2 பேருக்கு நேற்று குழந்தை பிறந்தது. கைக்குழந்தைகளுடன் ஏராளமான பெண்கள் கடும் வெயிலுக்கு மத்தியில் எந்த அடிப்படை வசதியும் இல்லாமல் தவிக்கிறார்கள். அகதிகள் அனைவரையும் திருப்பி அனுப்ப அமெரிக்கா தேவையான ஏற்பாடுகளை செய்துள்ளது.

அதன்படி அகதிகள் விமானங்களில் ஏற்றப்பட்டு அவர்களின் நாடுகளுக்கு திருப்பி அனுப்பப்படுகின்றனர். கடந்த 17ம் திகதியில் இருந்து இதுவரை ஹைத்திக்கு 3.300 அகதிகள் அனுப்பப்பட்டிருப்பதாக அதிகாரிகள் கூறுகின்றனர். 'டெல் ரியோ பாலத்தின் அடியில் தங்கியிருக்கும் 12,662 அகதிகளை திருப்பி அனுப்ப தினமும் விமானங்கள் இயக்கப்படும். விமானங்களை அதிகரிப்பதைத் தவிர வேறு வழியில்லை. இந்த விமானங்கள் புலம்பெயர்ந்தவர்களை ஹைத்தி அல்லது அவர்கள் விரும்பும் பிற நாடுகளுக்கு அழைத்துச் செல்லும்' என. அமெரிக்காவின் உள்நாட்டு பாதுகாப்புத்துறை தலைவர் கூறி உள்ளார். அமெரிக்க எல்லையில் முகாமிட்டுள்ள ஹைத்தி அகதிகளில் பலர் நாடு திரும்புவதை விரும்பவில்லை. மெக்சிகோவில் தங்கியிருக்கவே திட்டமிட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது.

## இந்தியா: பயங்கரவாதம், பருவநிலை மாற்றம், தடுப்பூசி குறித்து ஐ.நாவில் விவாதம்

ஐ.நா., பொதுச் சபையில் பயங்கரவாதம், பருவ நிலை மாற்றம், தடுப்பூசி விநியோகம் உள்ளிட்ட முக்கிய பிரச்சினைகளை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளும்படி வலியுறுத்த, இந்தியா திட்டமிட்டுள்ளது. கடந்த ஒரு வாரமாக ஐ.நா., பொதுச் சபையின் 76வது கூட்டம் நடந்து வருகிறது. இக்கூட்டத்தில் இன்று, அமெரிக்க அதிபர் ஜோ பைடன் பங்கேற்க உள்ளார். பிரதமர் மோடி 25ம் திகதி உரையாற்ற உள்ளார். இது குறித்து ஐ.நா.,வுக்கான இந்திய தூதர் டி.எஸ்.திருமூர்த்தி கூறியதாவது: இந்தியாவுக்கு தற்போதைய ஐ.நா.,பொதுச் சபை கூட்டம் பல வகையில் முக்கியமானது. ஐ.நா., பாதுகாப்பு கவுன்சில் உறுப்பினராக உள்ள இந்தியா, வளரும் நாடுகளின் பல்வேறு பிரச்சினைகளுக்கு குரல் கொடுப்பதில் முதலிடம் வகிக்கிறது.

எனவே இந்த கூட்டத்தில் பிரதமர் மோடியின் பேச்சுக்கு உலக நாடுகள் இடையே மிகுந்த எதிர்ப்பார்ப்பு உள்ளது. பயங்கரவாதம், பருவநிலை மாற்றம், அனைத்து நாடுகளுக்கும் தடுப்பூசி கிடைக்கச் செய்வது, வறுமை ஒழிப்பு உள்ளிட்ட பிரச்சினைகள் குறித்து விவாதிக்க இந்தியா வலியுறுத்தும் என, எதிர்பார்க்கப்படுகிறது. பெண்களின் சுயாதிகாரம், இந்தோ – பசிபிக் பிராந்தியத்தின் அமைதி, உலக நாடுகளின் பொருளாதார மீட்சி, ஸ்திரமான வளர்ச்சிக்கான இலக்கு ஆகியவை குறித்தும் விவாதிக்கும்படி இந்தியா வலியுறுத்தும். விவாதத்தை தடுக்க அல்லது நிறுத்தும் முயற்சிகளை உறுப்பு நாடுகளின் ஆதரவுடன், இந்தியா முறியடிக்கும் என அவர் கூறினார்.